மாண்புமிகு பேரவைத் தலைவர்: 146–ஆல் 2,000–ஐ வகுத்து விடுங்கள். சரியாகக் கணக்கு வந்து விடும்.

தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உறைவிந்து விநியோகம்.

* 4186— திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் ;

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, கொட்டாம்பட்டி அல்லது மேலூரில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உறைவிந்து விநியோகம் செய்ய திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இது குறித்த விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விவர அறிக்கை

(அ) ஆம்.

(ஆ) மதுரை கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின்கீழ் இரண்டு மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையங்கள் முறையே மதுரை மற்றும் மேலூரில் செயல்பட்டு வருகின்றது. அதில். மேலூர், மண்டல செயற்கை முறை இன விருத்தி நிலையத்தின்கீழ் 25 கிளை நிலையங்கள் செயல்படுகின்றன. இந்த 25 கிளை நிலையங்களில் 11 கிளை நிலையங்களில் மார்ச்சு 1988 முதலும், 3 கிளை நிலையங்களில் செப்டம்பர் 1988 முதலும், ஆக மொத்தம் 14 கிளை நிலையங்களில் உறை விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி செயல்பட்டு வருகின்றது.

அவைகள் வருமாறு:

1. சமயநல்லூர்
2. விளாங்குடி
3. பொதும்பு
4. ஊர் மெச்சிகுளம்
5. சிந்தாமணி
6. ஐராவதநல்லூர்
7. அவனியாபுரம்
8. சிலைமான்
9. செல்லூர்
10. கே. புதூர்.
11. பொன்னகரம்.

1. ஒத்தக்கடை 2. அப்பன்திருப்பதி 3. கொடிமங்கலம்

கீழ்க்கண்ட 11 இளை நிலையங்களில் திரவ விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படுகிறது:—

1. மேலூர்
2. வெள்ளளூர்
3. தனியாமங்கலம்
4. அ. வெள்ளாளப்பட்டி
5. தெற்குத்தெரு
6. திருவாரூர்
7. புதுத்தாமரைப்பட்டி
8. தும்பைப்பட்டி
9. ஆண்டார்கொட்டாரம்
10. களிமங்கலம்
11. வளையங்குளம்.

கொட்டாம்பட்டி கிளை நிலையம் வாடிப்பட்டி, கால் நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் அலங்காநல்லூர் மண்டல செயற்கை முறை இன விருத்தி நிலையத்தின் கீழ் செயல்படுகின்றது. இங்கு திரவ விந்து மூலம் கருவூட்டல் பணி மற்கொள்ளப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மே 12]

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மேலூர் பகுதியில் உறை விந்து நிலையம், செயற்கை முறை கருவூட்டல் நிலையம் அமைக்க எந்த விவரமும் தரப்படவில்லை. ஆகவே, இந்த ஆண்டாவது அந்த உறை விந்து நிலையத்தை மேலூர் பகுதியில் அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில் இப்போது 14 நிலையங்களில் உறை விந்துத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் 11 நிலையங்களில் மட்டும் தான் உறை விந்துத் திட்டம் தற்சமயம் செயல் படுத்தப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப தமிழகத்தில் உள்ள எல்லா கால் நடை மருந்தகங்களிலும், கிளை நிலையங்களிலும் உறை விந்துத் திட்டத்தை செயல்படுத்துகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது படிப்படியாக நிறைவேற்றப்படும். அரசினுடைய நிதி நிலைமைக்கேற்ப உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, கொட்டாம்பட்டி கிளை நிலையம் வாடிப்பட்டி கால் நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் செயல் படுவதாக இங்கே அமைச்சர் அவர்கள் அறிக்கையில் தெரிவித்து இருக்கிறார்கள். வாடிப்பட்டியானது கிட்டத்தட்ட 100 கி. மீ. தூரத்தில் இருக்கிறது. ஆகவே, கொட்டாம்பட்டி பகுதியில் இந்த உறை விந்து நிலையத்தை இந்த வருடம் அரசு அமைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். உறை விந்துத் திட்டம் படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அரசினுடைய நிதி நிலைமைக்கேற்ப அவை கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருந்தகம்

*6557—திரு. ஆர். சிங்காரம்:
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடி மற்றும் பண்ணைவயல் கிராமங்களில் கால் நடை மருந்தகம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?